**செய்தி வெளியீடு எண்: 030** **நாள்: 13.01.2020**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று (13.1.2020) தலைமைச் செயலகத்தில், 2019–ஆம் ஆண்டு உத்திரபிரதேச மாநிலம், லக்னோவில் 20.12.2019 முதல் 22.12.2019 வரை நடைபெற்ற தேசிய தீயணைப்பு விளையாட்டுகள் மற்றும் தீயணைப்பு சேவை விளையாட்டு போட்டிகளில் 15 தங்கம், 18 வெள்ளி மற்றும் 13 வெண்கலப் பதக்கங்களை வென்ற 33 தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள், பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இரண்டாவது தேசிய தீயணைப்பு விளையாட்டுகள் மற்றும் தீயணைப்பு சேவை விளையாட்டு போட்டிகள் உத்திரபிரதேச மாநிலம், லக்னோவில் 20.12.2019 முதல் 22.12.2019 வரை நடைபெற்றது. இப்போட்டியில் 16 மாநில தீயணைப்பு மற்றும் மீட்பு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் தீயணைப்பு பிரிவு, என 700 தீயணைப்பு வீரர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் தொழில் ரீதியாக முக்கியமானதாக கருதப்படும் Ultimate Fire Fighting Drill போட்டியில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை வீரர் திரு.சி. கோவிந்தசாமி அவர்கள் தங்கப் பதக்கமும், திரு. எம். சசிகுமார் அவர்கள் வெண்கலப் பதக்கமும் வென்றார்கள்.

மேலும், இப்போட்டியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள், ஓட்டப்பந்தயத்தில் 3 தங்கம், 4 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களும், தொடர் ஓட்டப்பந்தயத்தில் 3 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களும், குண்டுஎறியும் போட்டியில் 1 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களும், நீளம் மற்றும் உயரம் தாண்டுதல் போட்டியில் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களும், இறகுபந்து போட்டியில் 1 தங்கம் மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களும், நீச்சல் போட்டியில் 1 தங்கம், 3 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களும், கூடைப்பந்து போட்டியில் 1 தங்கப் பதக்கமும், வாலிபால் போட்டியில் 1 வெண்கலப் பதக்கமும், மல்யுத்த போட்டியில் 1 வெள்ளிப்

பதக்கமும், பளுதூக்கும் போட்டியில் 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களும், உடற்கட்டு போட்டியில் 1 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கங்களும், கராத்தே போட்டியில் 1 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கங்களும், என மொத்தம் 15 தங்கம், 18 வெள்ளி மற்றும் 13 வெண்கலப் பதக்கங்களை வென்றார்கள்.

பதக்கங்களை வென்ற 33 தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

தமிழ்நாடு கடலோரப் பாதுகாப்புப் படை, பொதுமக்களுக்கான சிறப்பான சேவை மற்றும் கடலோரப் பாதுகாப்பினை வலுப்படுத்த எடுத்த முன்னெடுப்புகளுக்காகவும், நாட்டின் முன்மாதிரியான அமைப்பாக விளங்குவதற்காகவும் வழங்கப்பட்ட 2019–ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் தங்க விருது மற்றும் தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்பு விருது ஆகிய இரு தேசிய அளவிலான விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று கடலோரப் பாதுகாப்புப் படையின் காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.கே. வன்னிய பெருமாள், இ.கா.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்வின்போது, புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.என். தளவாய் சுந்தரம், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் முனைவர் சி. சைலேந்திர பாபு, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**